திரு. கே. எ. வகாப் : இராணிப்பேட்டை மட்டுமல்ல, வட ஆற்காடு மாவட்டத்திலே இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். மற்றத் துறைகளில் இருப்பவர்களுக்கு கைவினைப் பொருள்கள் கொடுப்பதுபோல் இதுவும் வாழ்க்கைப் பிரச்சினை என்ற அடிப்படையில் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொடுக்கிற யோசனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு சங்கம் அமைப்பது பற்றி ஆட்சேபணை கிடையாது. பீடித் தொழிலைப் பொறுத்த வரையில் அதற்கு சந்தை, மார்க்கட் பிடிப்பது ரொம்பக் கஷ்டம். ஆகவே ஆங்காங்கு உள்ளவர்கள், சட்டமன்ற உறுப்பினரைப் போன்றவர்கள் முயற்சி எடுத்து இந்த வியாபாரத்தைச் செய்ய முன்வருவார்களேயானால் கூட்டுறவுத் துறையில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பண உதவி செய்யத் தயாராயிருக்கிறோம்.

மதுரை மாவட்டத்துக்கான நீர்த்தேக்கத் திட்டங்கள்

*** 757 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் தற்போது ஆய்விலிருக்கும் நீர்த் தேக்கத் திட்டங்கள் எவையெவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவையின் முன் ஓர் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, இதில் பெரியாறு முன்னேற்றத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு, எத்தனை ஆண்டுக் காலம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருப்பது? இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டால் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ 4.25 கோடியாகும். வைகையாற்றின்

---

* 170—171-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.